

புதுக்கோட்டை தெற்கு மாவட்டச் செயலாளர், சட்டத்துறை அமைச்சர் எஸ்.ரகுபதி, பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை அமைச்சர் சிவ.வீ.மெய்யநாதன், புதுக்கோட்டை வடக்கு மாவட்டச் செயலாளர் கே.கே.செல்லப்பாண்டியன் ஆகியோர் கழகத்தின் மூத்த முன்னோடி மிசா.க.ஆறுமுகம் அவர்களின் 16 ஆம் ஆண்டு நினைவு தினத்தை முன்னிட்டு அவரது திருவுருவப் படத்திற்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார்கள். உடன் மாநகரச் செயலாளர் ஆ.செந்தில், மேயர் திருமதி திலகவதி செந்தில், த.சந்திரசேகரன், க.மதியழகன், என்.சேட்டு, இராசு. சந்தோஷ், எம்.எம்.பாலு, டி.செல்வம், ப.ரெங்கராஜ், பழனிவேலு, செ.கணேஷ், எல்.ஐ.சி. ரமேஷ் மற்றும் கழக நிர்வாகிகள் உள்ளனர்.



கிருஷ்ணகிரி கிழக்கு மாவட்டம் கிருஷ்ணகிரி கிழக்கு ஒன்றியம் துவாரகாபுரி கிராமத்தில் மாநில விவசாய அணி துணைச் செயலாளர் டேம்.வெங்கடேசனின் தளபதி இல்லத்தினை வேளாண்மை மற்றும் உழவர் நலத்துறை அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் திறந்து வைத்தார். இந்நிகழ்ச்சியில் சுற்றுலாத்துறை அமைச்சர் ஆர்.ராஜேந்திரன், கிருஷ்ணகிரி கிழக்கு மாவட்டச் செயலாளரும் சட்டமன்ற உறுப்பினருமான தே.மதியழகன், மேற்கு மாவட்டச் செயலாளரும் சட்டமன்ற உறுப்பினருமான ஒய்.பிரகாஷ் உள்ளிட்ட ஏராளமானோர் பங்கேற்றனர்.

# திருக்கடையூர், அமிர்தகடேசுவரர் திருக்கோயில் புதிய வெள்ளித்தேர் வெள்ளோட்டம்!

## அமைச்சர் பி.கே.சேகர்பாபு மற்றும் ஆதீன பெருமக்கள் தொடங்கி வைத்தனர்!

சென்னை, டிச. 7-

தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் வழிகாட்டுதலின் படி, இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் பி.கே. சேகர்பாபு மற்றும் ஆதீன பெருமக்கள் நேற்று முன்தினம் (05.12.2024) மயிலாடுதுறை மாவட்டம், திருக்கடையூர், அமிர்தகடேசுவர சுவாமி திருக்கோயிலில் ரூ.3 கோடி செலவில் உருவாக்கப்பட்டுள்ள புதிய வெள்ளிரத வெள்ளோட்டத்தினை தொடங்கி வைத்தனர்.

மயிலாடுதுறை மாவட்டம், திருக்கடையூர், அபிராமி அம்மாள் உடனாகிய அமிர்தகடேசுவர சுவாமி திருக்கோயிலானது, பக்த மார்க்கண்டேயருக்காக எமனை வதம் செய்து மார்க்கண்டேயருக்கு “என்றும் சிரஞ்சீவியாக வாழும் வரம்” அருளியதும் அபிராமி பட்டருக்காக அமாவாசையை பௌர்ணமி ஆக்கியதுமான சிறப்புகளை கொண்ட திருத்தலமாகும். சமய குரவர்களில் திருஞானசம்பந்தர், அப்பர், சுந்தரர் ஆகியோராலும் அபிராமி பட்டராலும் பாடல் பெற்ற அட்டவீரட்டத் தலங்களில் ஒன்றாகும்.

இத்திருக்கோயிலுக்கு ரூ.3 கோடி செலவில் 250 கிலோ வெள்ளியை கொண்டு உபயதாரர் கே.எஸ்.ஜெயராமன் அவர்களால் புதிய வெள்ளித்தேர் செய்து கொடுக்கப்பட்டுள்ளது. நேற்று நடைபெற்ற புதிய வெள்ளித்தேரின் வெள்ளோட்ட நிகழ்ச்சியில் இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் பி.கே. சேகர்பாபு, ஆதீன பெருமக்கள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டு தொடங்கி வைத்தனர்.

இந்நிகழ்ச்சியில் இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் பேசுகையில்,

திருக்கடையூர், அமிர்தகடேசுவர சுவாமி திருக்கோயிலின் புதிய வெள்ளித்தேர் வெள்ளோட்ட நிகழ்ச்சியில் பங்கேற்றதில் பெருமகிழ்ச்சி அடைகிறேன். தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் தலைமையிலான ஆட்சி அமைந்த பிறகு தருமபுரம் ஆதீனத்திற்குட்பட்ட 26 திருக்கோயில்களுக்கு குடமுழுக்கு நடத்தப்பட்டுள்ளது. மாநில வல்லுநர் குழுவால் 10,799 திருக்கோயில்களுக்கு திருப்பணிகள் மேற்கொள்ள அனுமதி வழங்கப்பட்டுள்ளது. இன்றைய தினம் குடமுழுக்கு நடைபெறும் 24 திருக்கோயில்களையும் சேர்த்து இதுவரை 2,342 திருக்கோயில்களில் குடமுழுக்கு நடைபெற்றுள்ளது. அதனால் இந்த ஆட்சியை ஆன்மிக ஆட்சி என்று சொல்லாமல் வேறு எந்த ஆட்சி என்று சொல்ல முடியும். திருக்கோயில்களில் உள்ள 70 தங்க தேர்களும், 58 வெள்ளி தேர்களும் முழுமையாக பழுது நீக்கப்பட்டு பக்தர்கள் நேர்த்தி கடன் செலுத்திடும் வகையில் பயன்பாட்டில் உள்ளது.

இந்த அரசு பொறுப்பேற்றபின் ரூ.31 கோடி மதிப்பீட்டில் 5 புதிய தங்கத்தேர்கள் மற்றும் ரூ.29.77 கோடி மதிப்பீட்டில் 9 புதிய வெள்ளித்தேர்கள் உருவாக்கப்படும் என அறிவிக்கப்பட்டது. அதில் ரூ. 8 கோடி செலவில் பெரியபாளையம், பவானியம்மன் திருக்கோயிலுக்கு புதிள தங்கத்தேர் மற்றும் ரூ. 4 கோடி செலவில் திருத்தணி, சுப்பிரமணிய சுவாமி திருக்கோயிலுக்கு புதிய வெள்ளித்தேர் பணிகள் நிறைவுற்று பக்தர்கள் நேர்த்தி கடன் செலுத்திடும் வகையில் உலா வருகிறது. அதேபோல பலநூறு கோடி மதிப்பீட்டில் புதிய மரத்தேர்களும், மரத்தேர் மராமத்து பணிகளும், திருத்தேர்களை பாதுகாத்திடும் வகையில் பாதுகாப்பு கொட்டகைகளும் அமைக்கப்பட்டு வருகின்றன. தருமபுரம் ஆதீனம் அவர்கள் எங்களுக்கு பல நல்ல ஆலோசனைகளை வழங்கி வருகின்றார்கள். ஆதீனங்களின் மனம் சிறுதும் கோணாமல் நிச்சயமாக இந்து சமய அறநிலையத்துறை தொடர்ந்து பயணிக்கும் என்று தெரிவித்தார்.

இந்நிகழ்ச்சியில் தருமபுர ஆதீனம் தவத்திரு மாசிலாமணி தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள், மதுரை ஆதீனம் தவத்திரு ஹரிஹர தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள், வேளாக்குறிச்சி ஆதீனம் தவத்திரு சத்தியஞான மகாதேவ தேசிக பரமாசாரிய சுவாமிகள், தொண்டை மண்டல ஆதீனம் தவத்திரு திருச்சிற்றம்பல தேசிக ஞானபிரகாச பரமாசாரிய சுவாமிகள், திண்டுக்கல் சிவபுர ஆதீனம் தவத்திரு திருநாவுக்கரசு தேசிக பரமாசாரிய சுவாமிகள், இரத்தினகிரி தவத்திரு பாலமுருகனடிமை சுவாமிகள், மயிலாடுதுறை நாடாளுமன்ற உறுப்பினர் செல்வி ஆர்.சுதா, பூம்புகார் சட்டமன்ற உறுப்பினர் எம்.நிவேதா முருகன், இந்து சமய அறநிலையத் துறை ஆணையர் பி.என். ஸ்ரீதர், கூடுதல் ஆணையர் டாக்டர் இரா.சுகுமார், மயிலாடுதுறை மாவட்ட வருவாய் அலுவலர் திருமதி ந.உமாமகேஸ்வரி, உயதாரர் கே.எஸ்.ஜெயராமன், மண்டல இணை ஆணையர் ச.சிவக்குமார், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.



தஞ்சை வடக்கு மாவட்ட தி.மு.க. அயலக அணி சார்பில் தமிழ்நாடு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்தநாளை முன்னிட்டு மாவட்ட அமைப்பாளர் முனைவர் ஏ.எஸ்.மூர்த்தி ஏற்பாட்டில் பட்டீஸ்வரம் பகுதியைச் சார்ந்த பள்ளி மாணவ, மாணவிகள் சுமார் 400. நபர்களுக்கு கல்வி உபகரணம் நோட், பேனா, பென்சில், பிஸ்கட் மற்றும் இனிப்புகளை மாவட்ட ஊராட்சிக்குழு துணைத் தலைவரும், ஒன்றியச் செயலாளருமான எஸ்.கே.முத்துச்செல்வம் வழங்கினார். இந்நிகழ்ச்சியில் அயலக அணியின் மாநில துணைச் செயலாளர் டி.ஆர்.கே.விஜயன் மற்றும் கழக நிர்வாகிகள், அணியின் நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

### கிருஷ்ணராயபுரம் தொகுதிக்குட்பட்ட - கரூர் மாநகராட்சியில்

# வார்டுகள்தோறும் பொதுமக்கள் குறைகேட்புக் கூட்டம்!

## அமைச்சர் வி.செந்தில் பாலாஜி வேண்டுகோள்!

கரூர், டிச.7-

கரூர் கிருஷ்ணராயபுரம் தொகுதிக்குட்பட்ட கரூர் மாநகராட்சியில் வார்டுகள் தோறும் டிசம்பர் 8 ம் தேதி நடைபெறும் பொதுமக்கள் குறைகேட்பு கூட்டத்தில் பொதுமக்கள் தங்களது கோரிக்கை மனுக்களை அளித்து பயன்பெறுமாறு மின்சார துறை அமைச்சர் வி. செந்தில் பாலாஜி வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இது குறித்து அமைச்சர் வி.செந்தில் பாலாஜி விடுத்துள்ள அறிக்கை வருமாறு:-

கரூர் சட்டமன்றத் தொகுதி மற்றும் கிருஷ்ணராயபுரம் சட்டமன்றத் தொகுதியில் நாளை (8.12.2024) கீழ்க்கண்ட விபரப்படி வார்டு வாரியாக பொது மக்களை நேரில் சந்தித்து கோரிக்கை மனுக்களைப் பெறும் நிகழ்வு நடைபெற உள்ளது. அந்தந்த பகுதி மக்கள் அனைவரும் இதில் கலந்து கொண்டு, கோரிக்கை மனுக்களை அளித்து பயன் பெறுமாறு வேண்டுகிறேன்.

டிசம்பர் 8ஆம் தேதி ஞாயிற்றுக்கிழமை காலை 7 மணி 47வது வார்டு பட்டாளம்மன் திருக்கோவில் கோடங்கிபட்டி, காலை 7:45 மணி 46வது வார்டு பகவதி அம்மன் திருக்கோயில், செல்லாண்டிபாளையம், காலை 8:30 மணி 45, 46வது வார்டு பகவதி அம்மன் திருக்கோவில் ராயனூர். காலை 9:15 மணி 44 வது வார்டு பாரதிதாசன் நகர் (சுரேந்தர் ஹோட்டல் எதிரில்). காலை 10:30 மணி 48 வது வார்டு காளியப்பனூர் மெயின் ரோடு. காலை 11:15 மணி 42 வது வார்டு கணபதிபாளையம் கோவில் அருகில் நண்பகல் 12 மணி 43 வது வார்டு மாரியம்மன் கோவில் (மண்டலம் 4 அலுவலகம் அருகில்), பகல் 12.45 மணி 37 வது வார்டு வ.உ.சி. தெரு (வாங்கலம்மன் ஸ்டோர்ஸ் எதிரில்), மதியம் 1.30 மணி 36வது வார்டு திருமாநிலையூர் பழைய பாலம். மதியம் 3 மணி 41வது வார்டு அசோக் நகர், மதியம் 3.45 மணி 40 வது வார்டு சக்தி நகர் விளையாட்டு மைதானம். மாலை 4.30 மணி 39வது வார்டு டிஎன்ஹச்பி. காலனி ரேஷன் கடை அருகில்.

மாலை 5.15 மணி 15 வது வார்டு நரிக்கட்டியூர் கோவில் அருகில். மாலை 6 மணி 14வது வார்டு வெள்ளாளப்பட்டி கோவில் அருகில். மாலை 6:45 மணி. 13 வது வார்டு சணப்பிரட்டி. இரவு 7:30 மணி 16வது வார்டு இபி.காலனி விளையாட்டு மைதானம். மேற்கண்ட பகுதியில் நடைபெறும் இந்நிகழ்ச்சியில் பொதுமக்கள் அனைவரும் கலந்து கொண்டு கோரிக்கை மனுக்களை அளித்து பயன் பெறுமாறு கேட்டுக் கொள்கிறோம்.

இவ்வாறு அமைச்சர் வி.செந்தில்பாலாஜி குறிப்பிட்டுள்ளார்.



கிருஷ்ணகிரி மாவட்டம் ஊத்தங்கரை வட்டம் கல்லாவி அரசு மேல்நிலைப்பள்ளி வளாகத்தில் 5 கிராமங்களில் கனமழையால் பாதிக்கப்பட்ட 125 குடும்பத்தினருக்கு உணவு மற்றும் உணவுப்பொருள் வழங்கல் துறை அமைச்சர் ஆறுதல் கூறி அரிசி பருப்பு, காய்கறிகள், பாய், போர்வை, சேலை ஆகிய பொருட்கள் அடங்கிய தொகுப்புகளை வழங்கினார். உடன் கிருஷ்ணகிரி வட்ட ஆட்சித் தலைவர் கே.எம்.சரயு, கிழக்கு மாவட்டச் செயலாளரும் பர்கூர் சட்டமன்ற உறுப்பினருமான தே. மதியழகன், மாவட்ட அவைத்தலைவர் நாகராஜ், பொருளாளர் கதிரவன், ஒன்றியச் செயலாளர்கள் ரஜினி செல்வம், எக்கூர் செல்வம், நரசிம்மன் உள்ளிட்ட அரசு அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

# 132 வது வட்டத்தில் நலத்திட்ட உதவிகள்!

சென்னை, டிச. 7 –

முதல்வர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்த நாளை முன்னிட்டு சென்னை தென்மேற்கு மாவட்டம் தியாகராயர் நகர் மேற்கு பகுதி 132 வது வட்டத்தில் நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழா நாளை (8.11.2024 – ஞாயிற்றுக்கிழமை) காலை 11 மணியளவில், 132 வது வட்டக் கழக செயலாளர் ந.மோ முரளி தலைமையில் கோடம்பாக்கம் சத்யா, சா.தேவராசு, கார்த்திகா, பாஸ்கர் எம்.சி, டி.மோசஸ், கா.சந்துரு, ச.சங்கர், என்.டி.ஆர்.வேலு, த.ராஜசேகரன், எம்.ராமச்சந்திரன் முன்னிலையில் நடைபெறுகிறது.

இதில் சுந்தர், பிளிப் பி.எஸ்.ராசன் நிகழ்ச்சி ஏற்பாட்டில் – காமராஜர் காலனி 7 வது தெரு, பள்ளி மாணவர்களுக்கு நலத்திட்ட உதவிகள் வழங்குதல்,

ஏ.நோபல், ஏ.கார்த்திக் நிகழ்ச்சி ஏற்பாட்டில் – காமராஜர் காலனி 9 வது தெரு பொதுமக்களுக்கு பிரியாணி வழங்குதல்,

இ.அஸ்வின்குமார் நிகழ்ச்சி ஏற்பாட்டில் – அஜீஸ் நகர் அன்னை இல்லம் முதியவர்களுக்கு மதிய உணவு வழங்குதல்,

பு ஆர்.பரத் நிகழ்ச்சி ஏற்பாட்டில் – லியூர் புரம் குகன் தெரு பள்ளி மாணவர்களுக்கு நலத்திட்ட உதவிகள் வழங்குதல் நிகழ்ச்சி நடைபெறுகிறது.

நலத்திட்ட உதவிகளை சென்னை தென்மேற்கு மாவட்ட கழக செயலாளர் மயிலை த.வேலு எம்.எல்.ஏ., தமிழச்சி தங்கபாண்டியன் எம்.பி., ஜெ.கருணாநிதி எம்.எல்.ஏ. ஆகியோர் வழங்கி சிறப்பிக்கின்றனர். இதில் கே.ஏழுமலை, எஸ்.மோகன், கோ.சு.மணி, மேம்பாலம் சேகர், பிரஸ் கோவிந்தன், குப்பம்மாள், பி.வேலு, மு.லோகு, எஸ்.விஜயன், எஸ்.ரஜினி, கே.தேவராஜ், ஒய்.எட்வின், எஸ்.வேலாயுதம், என்.ராமநாதன், கே.ஜலந்தர், ஆர்.வசந்த், எஸ்.பி.சசி, து.மங்கள்ராஜ், பா.புகழ், எஸ்.மணிகண்டன், து.ஆனந்தராஜ், ந.மு.தமிழ், க.பிரசாந்த், மு.உதயநிதி, ஆர்.விக்னேஷ், எம்.செந்தில், மாரியம்மாள், கனகா, பிரேமா, இந்திரா, ஸ்ரீதேவி, பா.சங்கர் மற்றும் கழகத்தின் கலந்து கொண்டு சிறப்பிக்கின்றனர்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### குளித்தலை முத்துகிருஷ்ணன்
### டிசம்பர் 7 (1989)



திருச்சி மாவட்ட தி.மு.க. துணைச் செயலாளராகவும், தமிழக சட்டமன்ற மேலவை உறுப்பினராகவும் பணியாற்றியவர்.

நங்கவரம் எனும் சிற்றூர் நாட்டிற்குத் தெரியாமல் இருந்த நிலையில், அங்குள்ள விவசாயிகளின் பிரச்சினைகளை கலைஞர் அவர்களிடம் சொல்லி, நங்கவரத்திற்கு கலைஞர் அவர்களை அழைத்து வந்து போராடி, அவர் மூலம் விவசாயிகள் துயர்துடைக்கச் செய்தவர்.

தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா, தலைவர் கலைஞர் ஆகியோரிடம் நெருங்கிப் பழகியவர்.

மொழிப்போர் உள்ளிட்ட கழகம் அறிவித்த அனைத்துப் போராட்டங்களிலும் கலந்து கொண்டு சிறை சென்றவர்.

நெருக்கடி காலத்தில் ‘மிசா’ சட்டத்தில் கைது செய்யப்பட்டு ஓராண்டு காலம் சிறையில் இருந்தவர்.

தலைமைக் கழகம்
தி.மு.க.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### வடக்கநந்தல் க.பெ. நெடுமாறன்
### டிசம்பர் 7 (1994)



சின்னசேலம் ஒன்றியக் கழகச் செயலாளராக மூன்று முறை தேர்ந்தெடுக்கப்பட்டு பணியாற்றியவர். தென்னாற்காடு மாவட்ட இலக்கிய அணிச் செயலாளராகவும் பொறுப்பேற்று செயல்பட்டவர்.

இந்தி எதிர்ப்பு, கறுப்புக்கொடி, கைலாசம் கமிசன் சட்ட எரிப்பு உள்ளிட்ட கழகம் அறிவித்த அறப்போராட்டங்களில் பங்கேற்று சிறை சென்றவர்.

1946 மே 11, 12 தேதிகளில் மதுரையில் கறுப்புச் சட்டைப் படை முதலாவது மாகாண மாநாட்டில் தனது துணைவியாருடன் கலந்து கொண்டவர்.

தலைவர் கலைஞர் அவர்களால் “கொள்கை பிடிவாதக்காரர்” என்று புகழ்ந்துரைக்கப்பட்டவர்.

தலைமைக் கழகம்
தி.மு.க.